https://www.qb365.in/materials/

3324553

No. of Printed Pages : 8

1301

பதிவு எண் 4 3 1 4 4 1 0

# பகுதி I – பொதுத் தமிழ்

QB365 Blog
QUESTION BANK 365

# Language – Part I – TAMIL

கால அளவு : 2.30 மணி நேரம் ] [ மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுத வேண்டும்.

I. பலவுள் தெரிக. **6x1=6**

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் கோயில் கொண்டுள்ள இடம் :

(அ) இமயமலை (ஆ) விராலிமலை

(இ) திருநீர்மலை (ஈ) சுவாமிமலை

2. திருக்குறளின் அழியாத் தன்மையை எடுத்துரைத்தவர் :

(அ) இடைக்காடனார் (ஆ) இறையனார்

(இ) கம்பர் (ஈ) கபிலர்

[ திருப்புக

Scanned by CamScanner

https://www.qb365.in/materials/



3. வீரமாமுனிவரின் தாய்நாடு :

(அ) இத்தாலி (ஆ) புதுச்சேரி

(இ) தமிழகம் (ஈ) பிரான்சு

4. 'பால் வீதி' என்ற நூலின் ஆசிரியர் :

(அ) வாணிதாசன் (ஆ) அப்துல் ரகுமான்

(இ) தாராபாரதி (ஈ) பாரதியார்

5. செந்தமிழ் நாடு எனப்படுவது :

(அ) பாண்டிய நாடு (ஆ) பல்லவ நாடு

(இ) சேர நாடு (ஈ) சோழ நாடு

6. உழைப்புக்குப் பஞ்சம் வந்தால் அதை வெல்ல வேண்டுவது :

(அ) பாலை நிலம் (ஆ) உவர் நிலம்

(இ) உழு நிலம் (ஈ) சதுப்பு நிலம்

II. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 8x1=8

7. கணிச்சிக் கூர்ம்படை - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு :

(அ) உம்மைத்தொகை (ஆ) பண்புத்தொகை

(இ) வேற்றுமைத்தொகை (ஈ) வினைத்தொகை

8. 'வேலி' என்னும் சிறுகதையின் ஆசிரியர் :

(அ) வண்ணதாசன் (ஆ) இராஜம் கிருஷ்ணன்

(இ) ஜெயகாந்தன் (ஈ) வல்லிக்கண்ணன்

9. இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்
- என்னும் விதி பயின்று வரும் சொல்.

(அ) கொத்துப்பூ (ஆ) மரப்பட்டை

(இ) மாம்பூ (ஈ) தேன்பூ

10. 'ஆசீர்வாதம்' - இச்சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லைத் தேர்க.

(அ) வாழ்த்து (ஆ) புகழ்

(இ) வணக்கம் (ஈ) நலம்

Scanned by CamScanner

QB 365 Blog
QUESTION BANK 365

4314410



11. பொருந்தாத இணையைத் தேர்வு செய்க :
(அ) கிழிசல் - நாஞ்சில் நாடன்
(ஆ) மண் - அய்க்கண்
(இ) சட்டை - வல்லிக்கண்ணன்
(ஈ) மகன் - பா. செயப்பிரகாசம்

12. "புடைபுடை யியக்கர்" - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு :
(அ) ஒருபொருட் பன்மொழி (ஆ) பெயரெச்சம்
(இ) அடுக்குத் தொடர் (ஈ) இரட்டைக்கிளவி

13. 'கிழிசல்' எனும் சிறுகதை வாயிலாக நாம் அறிந்து கொள்வது :
(அ) பேராசை பெரு நட்டம் (ஆ) ஒற்றுமையே வலிமை
(இ) சிறு துளி பெரு வெள்ளம் (ஈ) நேர்மையே சிறந்த கொள்கை

14. காண், கான் இச்சொற்களுக்குரிய பொருளறிந்து தேர்க :
(அ) மூங்கில், மான் (ஆ) சோலை, காடு
(இ) பார், காடு (ஈ) மரம், சோலை

III. குறுவினா 3x2=6

(அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.

15. 'அன்புடை மரபின் நின் கிளையோடார வல்சி தருகு வென்'
- இதன்கண் அமைந்துள்ள இறைச்சிப் பொருளைச் சுட்டுக.

16. நில உலகத்தைவிடப் பெரியது எது ?

17. சுந்தர காண்டம் என்று பெயர் வரக் காரணம் யாது ?

18. அந்தாதி - விளக்குக.

(ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x2=4

19. பழந்தமிழ் மக்கள் எத்தகைய கொள்கை உடையவர்களாக இருந்தனர் ?

20. 'உய்த்து' என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது ?

21. குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்ட காலம் யாது ? இவ்வகை கோயில்களை அமைத்த மன்னர்கள் யாவர் ?

[ திருப்புக

Scanned by CamScanner

IV. எவையேனும் ஏழனுக்கு விடை தருக. 7x2=14

22. வலிமிகா இடங்களில் உள்ள வல்லெழுத்துகளை நீக்கி எழுதுக.
(அ) குபுக்குபுக்வென்றுப் புகை மண்டிலம் சூழ்ந்தது.
(ஆ) வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான் ? அறிந்துச் சொல் எனக்கு.

23. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
(அ) விழாவில் பல அறிஞர்கள் பேசினர்
(ஆ) இடதுபக்கம் இருப்பது ஔவையார் சிலை அன்று

24. கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.
(அ) கோளி முட்டை தாவாரத்தில் உருண்டது
(ஆ) கொடுத்த சேதியைக் கோர்வையாய்ப் பேசு

25. பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
(அ) டிசைன் (ஆ) லோன்
(இ) ஜில்லா (ஈ) உபந்நியாசம்

26. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
(அ) பலாத் தோட்டத்தில் பலாப்பிஞ்சு பறித்து வந்தேன்
(ஆ) யானை மேய்ப்பானோடு ஆட்டுப்பாகனும் வந்தான்

27. ஏற்ற இடங்களில் நிறுத்தக் குறியிட்டு எழுதுக.
அப்பா ஏழாம் திருநாளுக்கு நானும் உன் கூட வரவா என்று மாணிக்கம் கேட்டான்

28. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
(அ) வெஞ்சினம் (ஆ) மண்ணரசு

29. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
(அ) போற்றி (ஆ) சுழன்று

30. வல்லினம் மிகும் இடங்களுக்குரிய விதிகள் இரண்டினை எழுதுக.

https://www.qb365.in/materials/

Scanned by CamScanner

4314410



V. சிறுவினா

(அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

31. பாண்டியன் பரிசாகிய பேழைக்குள் இருந்தன யாவை ?

32. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

'நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்'

33. காடு எவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளது ?

(ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

34. முற்காலத்தும் இக்காலத்தும் வழங்கும் இசைத்தமிழ் நூல்கள் யாவை ?

35. 'ஆ'வின் வாயிலாக மனிதன் பெறும் பயன்கள் யாவை ?

36. முதன் முதலில் கட்சி அமைப்பு எவ்வாறு உருவாகியது ?

VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x4=12

குறிப்பு : பகுதி VI -ல் வினா எண் 38 -ல் காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

37. திரிபணி அல்லது உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

38. தமிழாக்கம் தருக.

(அ) Knowledge is power.

(ஆ) Prevention is better than cure.

(இ) A penny saved is a penny gained.

(ஈ) Congratulations for your success.

QB 365 QUESTION BANK 365

[ திருப்புக

Scanned by CamScanner

38. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. **VI** -ல் உள்ள வினாக்களுக்கு பதிலாக காது கேளாத மாணவர்கள் பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு வினா எண் 38 (அ) முதல் (ஈ) வரை ஏற்ற விடையை எழுதுக.

காந்தியடிகளின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சி :

உயர்தரப்பள்ளியில் காந்தியடிகள் எழுதிய முதலாம் ஆண்டுத் தேர்வின்போது, கல்வித்துறை ஆய்வாளர் பரீகைல்சு அப்பள்ளி ஆய்வுக்காக வந்துள்ளார். எழுத்துக் கூட்டி எழுதும் பயிற்சிக்காக, அவர் மாணவர்களுக்கு ஐந்து சொற்களைக் கூறி எழுதச் சொன்னார். அவற்றுள் ஒரு சொல் 'கெட்டில்' என்பது, அதனை காந்தியடிகள் தவறாக எழுதிவிட்டார். காந்தியடிகள் தவறாக எழுதியதனை ஆசிரியர் குறிப்பால் உணர்த்தியும் அதனை காந்தியடிகள் புரிந்து கொள்ளவில்லை. காந்தியடிகளைத் தவிர மற்ற எல்லா மாணவர்களும் அச்சொல்லை சரியாக எழுதியிருந்தனர். காந்தியடிகள் 'பார்த்து எழுதும்' பழக்கத்தை அவரது பள்ளி நாட்களில் செய்யவில்லை.

எனவே, காந்தியடிகள் தம் குழந்தைப் பருவத்திலேயே பார்த்து எழுதக் கூடாது என்னும் கொள்கையில் உறுதியாக இருந்தார். காந்தியடிகளைப் போல் அனைவரும் நேர்மையைக் கடைப்பிடித்து செம்மையாக வாழ வேண்டும்.

**வினாக்கள் :**

(அ) காந்தியடிகள் படித்த பள்ளிக்கு கல்வித்துறை ஆய்வாளர் வந்தபொழுது மாணவர்கள் எப்பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டனர் ?

(ஆ) காந்தியடிகள் பள்ளிக்கு வந்த ஆய்வாளர் மாணவர்களுக்கு எத்தனைச் சொற்களை எழுதச் சொன்னார் ? அதில் எந்த சொல்லை காந்தியடிகள் தவறாக எழுதினார் ?

(இ) மேலே கூறப்பட்ட பத்தியின்படி காந்தியடிகள் எப்பழக்கத்தைக் கற்றுக் கொள்ளவில்லை ?

(ஈ) காந்தியடிகள் வாழ்க்கையில் நடந்த நிகழ்வு நமக்கு எதை உணர்த்துகிறது ?

Scanned by CamScanner

4314 410

QB365 Blog
QUESTION BANK 365



39. பின்வரும் பாடலைப் படித்துணர்ந்து மையக் கருத்தை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றனை எடுத்தெழுதுக.

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனி பசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

-பாவேந்தர் பாரதிதாசன்

40. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்தெழுதுக.

வாய்மையே வெல்லும்

**அல்லது**

'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்'.

VII. பின்வரும் வினாக்களுக்கு **இரு பக்கங்களுக்கு மிகாமல்** விடை தருக. 2x6=12

41. சிலப்பதிகார ஊர்சூழ்வரியில் கண்ணகியின் சூளுரையும், கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் எழுதுக.

**அல்லது**

தன்னம்பிக்கையற்றுக் காணப்படும் இளைஞனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

42. சமரசக்கோயிலை அமைத்தவர் யார்? சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாக அவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

ஓவியக்கலை தமிழகத்தில் சிறந்திருந்தது என்பதை விளக்குக.

[ திருப்புக

https://www.qb365.in/materials/

Scanned by CamScanner

43. 'பால் வண்ணம் பிள்ளை' என்னும் சிறுகதையைக் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி எழுதுக. 1x6=6

அல்லது

'ஒவ்வொரு கல்லாய்' - இச்சிறுகதையில் வரும் கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் விடை தருக. 4+2=6

44. (அ) உரைநடையின் சிக்கனந்தான் ......... எனத் தொடங்கும் மறுமலர்ச்சிப்பாடல்.

(ஆ) '.......... வரைத்து' என முடியும் குறள்.

- o O o -

https://www.qb365.in/materials/

Scanned by CamScanner